## சாட்சிய வாக்குமூலம்
## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
முன்னிலை:– முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

அசல் வழக்கு 53/2021
நாள் :05.03.2026
பி.வா.சா. :1
பெயர் : சந்திரன்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

வாசாஆ 3 ஆவணம் என் மனைவி இரண்டாம் பிரதிவாதி இரண்டாம் வாதிக்கு எழுதிக்கொடுத்த போக்கி பத்திரம் என்றால் சரிதான் அதில் ஒரு லட்சம் ரூபாய் பெற்றுக்கொண்டு இரண்டு ஏக்கர் நிலத்தை போக்கியம் கொடுத்திருக்கிறார் அந்த போக்கிய பத்திரத்தில் மேற்படி அசல் பணத்தை கொடுத்து போக்கிய நிலத்தை மீட்டுக்கொள்கிறேன் என்று சொல்லியுள்ளார் என்றால் சாட்சி நிலம் எனக்கு சொந்தமானது அதை என் மனைவி போக்கியம் கொடுக்கமுடியாது என்கிறார். இந்த சொத்து தற்போது என் அனுபோகத்தில் தான் உள்ளது. என் மனைவி அந்த சொத்தை இரண்டாம் வாதிக்கு கைவம் அனுபவிக்க கொடுக்கவில்லை. ஒரு லட்சம் பணத்தை என் மனைவி வாங்கினாரா என்று எனக்கு தெரியாது. என் முழுப்பெயர் செயற்கை சந்திரன். ஊரில் என்னை அப்படி தான் அழைப்பார்கள். வாதியின் அம்மா கலைச்செல்வி எனக்கு மாமியார். 2010-2011 காலகட்டத்தில் அவருக்கு என்ன வயது என்று எனக்கு தெரியாது. அவர் திடகாத்திரமாக இருந்தார். நானும் என் மனைவியும் இரண்டாம் வாதி கொடுத்த பணத்தை அவர் வீடு கட்டுவதற்கு திரும்ப கொடுத்துவிட்டோம். இரண்டாம் வாதி மாப்படுகையில் வீடுகட்டிய விவரம் மட்டும் தான் தெரியும் மற்ற விவரங்கள் தெரியாது. வீடு எப்போது

கட்டடப்பட்டது என்று தெரியாது. எதிர்வழக்குரையில் வழக்கு காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் 15.03.2020, 28.02.2022 வரை கொரணா காரணமாக காலக்கெடு உச்ச நீதிமன்றம் நீட்டிப்பு கொடுத்துள்ளது என்றும் அதனால் இந்த வழக்கு காலாவதியால் பாதிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் 25.10.2019 முதல் 21.03.2021, 27.03.2021, 26.04.2021 ஆகிய தினங்களில் எனக்கு நோட்டீஸ் அனுப்பியிருந்தார் அனைத்தை பெற்றுக்கொண்டு 05.05.2021 அன்று அனுப்பிய அறிவிப்பை திருப்பி அனுப்பிவிட்டேன், ஆனால் எதிர்வழக்குரையில் வழக்கறிவிப்புகளை என் வழக்கறிஞரிடம் கொடுத்தேன் அவர் பதிலனுப்பவில்லை என்று சொல்லியுள்ளது ஒரு நற்பண்பு அல்ல என்றாலும் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளகூடிய நம்பிக்கை இழந்துவிட்டேஎன் றால் சரியல்ல. ஒரு லட்சம் ரூபாய் பணத்தை பெற்றுக்கொண்டு போக்கியம் கொடுப்பதாக பத்திரத்தில் ஒப்பிட்டு கொண்டு சொத்தை நானே அபகரித்து வைத்துக்கொண்டு மோசடியாக நடந்துகொள்கிறேன் எனவே நான் ஒரு நேர்மையற்ற மனிதர் என்றால் சரியல்ல.